ஹர:

உ

கணபதி துணை.

சிவசிவவெண்பா.

இஃது.

சிதம்பரம்பச்சகந்தையர்மடத்துச்

சென்னமல்லையர்

அருளிச்செய்தது.

எழுத்தும் சொல்லும் அடியும்பாட்டும் கையெழுத்துப்பிரதிகளிலே மிகுந்தும் குறைந்தும் பாடந்தோறும் வேறுபட்டிருத்தலால் அப்பிழைகளை நீக்கிச்சுத்தபாடமாக வழங்குவித்தற்பொருட்டுச் சென்னைவிவேகக்கல்விச்சாலைத்தமிழ்த்தலைமைப்புலவராகிய

திருத்தணிகைச்

சரவணப்பெருமாளையர்

முன்னிலையில் ஆ-தொண்டமண்டலம் அறுநான்கு கோட்டங்களிலே முதனான்காவதாகியமணவூர்க்கோட்டம் பாசாலைநாடு கூவம் குமாரந்தையார்கோத்திரம் இராஜ

திரிபுராந்தகமுதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு-புதுவை-ஐயாமுதலியார்குமாரர் முத்தையாமுதலியாரும்ஷெயார்மச்சினராகிய புதுவை-ஐயாசாமிமுதலியாரும் ஆகிய இவரிருவரும் கேட்டுக்கொண்டபடி அச்சிற்பதுப்பிக்கப்பட்டது.

ஏ விளம்பி௵ தை௴ இதன்விலை-அணா-௧.

ஸ்ரீ:

சிவசிவவெண்பா.

கணபதிகாப்பு.

தெள்ளுலகநீதிசிவசிவாவென் றுதிரு
வள்ளுவர்வெண்பாவால்வழுத்துறவெற் - குள்ள துணை
கந்தனிலீராறுனைகைமேவியகருணைத்
தந்திமுகன்செம்பதுமத்தாள்.

(அவையடக்கம்.)

சிவசிவாவென்பாரிச்செய்யுட்டிறந்தேர்ந்
தெவர்களுமென்றஞ்சாதிசைத்தேன் - கவிஞரியற்
பண்பாலுரைத்தபழமொழிமுன்னீதுமொரு
வெண்பாநூலாய்விளங்கவே.

(கடவுள்வாழ்த்து)

விற்பிரம்பாலுற்றவடுமேவவுலகெங்குநிறை
சிற்பரனேதெய்வஞ்சிவசிவா - சொற்சிறந்த
வகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு. (க)

[இப்பாட்டிற்குப்பிரமாணம்.]

(நூலாசிரியர்பாடல்.)

இந்திரனைமௌலிதுகள்படவடித்தான்வழுதிமுன்னுளிறையோனின்ற, கந்தனயன் குட்டுவெளிப்படவடித்தான்றொடர்ந்தோடிக்கண்ணன்றன்னை, நந்தன்மனையடித்தனளிவ்வடிகளெலாமேவணுற்றநாதன்மீதே, யிந்துகுலமன்னரடியிருதி[illegible]மெவ்வுலகுமெய்திற்றன்றே.

(பாரதம்.)

விண்ணிலுறைவானவரி லியாரடிபடாதவர் விரிஞ்சன்முதலோருததிசூழ், மண்ணிலுறைமன்பதையிலியாரடிபடாதவர் மனுக்கண்முதலோர்களகலாக், கண்ணிலுறை நாகர்களிலியா[ரடிப]டாதவர்கள்கட்செவிமகீபர்முதலா, வெண்ணில்பலயோனியிலுமியாரடிபடாதவரிருந்துழியிருந்துழியரோ.

(திருவாதவூரர்புராணம்.)

தார்மேனின்றிலங்குபுயமழுதிமேலுந் தன்மனைமங்கையர் மேலும்மமைச்சர்மேலும், யார்மேலுஞ்சென்றுபெருஞ் சேனைமேலுமயன்மேலுமான்மேலுமறவோர்மேலுந்,தேர்மேலொண்பகன்மேலுமதியின்மேலுஞ்சிறந்துளவிந்திரன்மேலுந்தேவர்மேலும், பார்மேலுங்கன்மேலுமரங்கண்மேலும் பட்டதரன்மெய்யிலடிபட்டபோதே.

இப்படியேமற்றைப்பாட்டுகளின்பிரமாணங்கள்இதனுரைப்பாடத்திற்காண்க.

(வான்சிறப்பு.)

பூமலர்கோனேரியற்கும்பூவையர்க்கும்பூமழைசெய்
தீமைநலங்கண்டோஞ்சிவசிவா-பூமுற்
கெடுப்பதூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றாங்கே
யெடுப்பதூஉமெல்லாமழை. (௨)

(நீத்தார்பெருமை.)

நல்லசுகருக்கன்றிநானுவதென்வேதமுனி
செல்லமடவார்சிவசிவா-சொல்லி
னூரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான்
வரனென்னும்வைப்புக்கோர்வித்து. (௩)

(அறன்வலியுறுத்தல்.)

எய்தருமம்பாலுயிர்நீத்தெய்துபொழுதுங்கன்னன்
செய்தருமமீந்தான்சிவசிவா-வுய்யுநெறி
யன்றறிவாமென்னாதறஞ்செய்கமற்றது
பொன்றுங்காற்பொன்றாத்துணை. (௪)

(இல்வாழ்க்கை.)

எய்துசவுபரிக்கன்றீன்றமகளராமணஞ்
செய்யவரசீந்தான்சிவசிவா-துய்யதவத்
தாற்றினொழுக்கியறனிழுக்காவில்வாழ்க்கை
நோற்பாரினோன்மையுடைத்து. (௫)

(வாழ்க்கைத்துணைநலம்.)

சத்தியந்தப்பாமலரிச்சந்திரற்குச்சந்த்ரமதி
சித்தமொருமித்தாள்சிவசிவா-புத்தியுடன்
றற்காத்துத்தற்கொண்டாற்பேணித்தகைசான்ற
சொற்காத்துச்சோர்விலாள்பெண். (௬)

(புதல்வரைப்பெறுதல்.)

மறலிசெயன்மாற்றிவயதரனூற்பெற்ற
திறன்மகப்பேருஞ்சிவசிவா-பெறுபே
றெழுபிறப்புந்தீயவைதீண்டாபழிபிறங்காப்
பண்புடைமக்கட்பெறின். (௭)

(அன்புடைமை.)

வேர்த்துரையாற்பூசைபுரிவேடன்மனைவெந்துமுன்போற்
சேர்ந்துபணிசெய்தாள்சிவசிவா-வோர்ந்தவிடத்
தன்பின்வழியதுயிர்நிலையஃதிலார்க்
கென்புதோல்போர்த்தவுடம்பு. (௮)

(விருந்தோம்பல்.)

அன்னமிடான்பொன்னுடைந்துந்தனதுடலைத்
தின்னெனவேதின்றான்சிவசிவா-மன்னியயற்
செல்விருந்தோம்பிவருவிருந்துபார்த்திருப்பா
னல்விருந்துவானத்தவர்க்கு. (௯)

(இனியவைகூறல்.)

குன்றெடுத்தானின்சொற்கொடுகருணைவாரிதியைச்
சென்றெடுத்தின்புற்றான்சிவசிவா-நன்றெடுத்
தின்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது. (௰)

(செய்நன்றியறிதல்.)

பூடணம்போல்வீடணன்மேற்போனவேலேற்றநன்றி
தேடமுடியாதேசிவசிவா-நாடியெதிர்
செய்யாமற்செய்தவுதவிக்குவையகமும்
வானகமுமாற்றலரிது. (௰௧)

(நடுவுநிலைமை.)

தங்கையுமைசொல்லானடுவிகந்தமால்வெருவு
செங்கணரவானான்சிவசிவா-வெங்குஞ்
சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி. (௰௨)

(அடக்கமுடைமை.)

[illegible]றைமுருகன்முன்னின்றிசைத்தமொழிதேரான்
[illegible]றையிருந்தான்முன்சிவசிவா-புறவுறுப்பின்
யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. (௰௩)

(ஒழுக்கமுடைமை.)
தன்மதுரைசொன்னபழிக்கஞ்சித்தகவுரைத்தான்
றென்மதுரைநாதன்சிவசிவா-வென்னி
னொழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய
வழுக்கியும்வாயாற்சொலல். (௰௪)

(பிறனில்விழையாமை.)
வரமிழந்தான்சீதையினால்வாழ்விழந்தான்பத்துச்
சிரமுமிழந்தான்சிவசிவா-வுரமா
மெனைத்துணையராயினுமென்னாந்தினைத்துணையுந்
தேரான்பிறனில்புகல். (௰௫)

(பொறையுடைமை.)
ஐவரினுமூன்றோனரசவையிலேபொறுத்த
செய்கைபெரிதன்றோசிவசிவா-வையத்
தொறுத்தாரையொன்றாகவையாரேவைப்பர்
பொறுத்தாரைப்பொன்போற்பொதிந்து. (௰௬)

(அழுக்காறாமை.)
மேருவுடனிகலிவிந்தமலைவீறழிந்து
சேருநிலனூடேசிவசிவா-வோரி
னழுக்காறெனவொருபாவிதிருச்செற்றுத்
தீயுழியுய்த்துவிடும். (௰௭)

(வெஃகாமை.)
வாசவனேராசைகொளவந்தபலனையிந்தத்
தேசமறியாதோசிவசிவா-பேசுங்காற்
சிற்றின்பம்வெஃகியறனல்லசெய்யாரே
மற்றின்பம்வேண்டுபவர். (௰௮)

(புறங்கூறாமை.)
குந்திமகார்பேறுரைத்தகொற்றவனுந்தன்வரவுஞ்
சிந்தைசெயலுற்றான்சிவசிவா-நிந்தை
பிறன்பழிகூறுவான்றன்பழியுள்ளுந்
திறந்தெரிந்துகூறப்படும். (௰௯)

(பயனிலசொல்லாமை.)
மன்னவையிற்சொன்னவசையாற்சிசுபாலன்
சின்னமுற்றானன்றேசிவசிவா-வென்னிற்
பயனில்சொற்பாராட்டுவானைமகனெனன்
மக்கட்பதடியெனல். (௨௰)

(தீவினையச்சம்.)

பாரமுடிபத்தும்பறித்தபழிசேதுவினிற்
றீருதலினாலேசிவசிவா-சாருமிகற்
றீயவைதீயபயத்தலாற்றீயவை
தீயினுமஞ்சப்படும். (௨௧)

(ஒப்புரவறிதல்.)

தாயைத்தடிகவென்றதந்தைமொழிதவறாச்
சேயைப்போலுண்டோசிவசிவா-வாயுமிடத்
தொத்ததறிவானுயிர்வாழ்வான்மற்றையான்
செத்தாருள்வைக்கப்படும். (௨௨)

(ஈகை.)

தந்தைக்கிளமைதரும்பூருவைநிகர்வார்
இந்திக்கினெங்கேசிவசிவா-நிந்தித்
திலனென்னுமெவ்வமுரையாமையீதல்
குலனுடையான்கண்ணேயுள. (௨௩)

(புகழ்.)

ஓடிவருபுட்கன்றுடலையரிந்தீந்தபுகழ்
தேடவரிதேசிவசிவா-நாடிவரி
னீதலிசைபடவாழ்தலதுவல்ல
தூதியமில்லையுயிர்க்கு. (௨௪)

(அருளுடைமை.)

அன்றுமகப்பெறுவாட்கன்னைவடிவாகியரன்
சென்றுதுணைசெய்தான்சிவசிவா-வென்று
மருட்செல்வஞ்செல்வத்துட்செல்வம்பொருட்செல்வம்
பூரியார்கண்ணுமுள. (௨௫)

(புலான்மறுத்தல்.)

புன்புலாலுண்ணாதுபுள்ளடைந்தநன்கறிவார்
தின்பரோதின்னார்சிவசிவா-துன்புறூஉந்
தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள். (௨௬)

(தவம்.)

ஆடும்பரிசேவலானானடற்சூரன்
றேடுந்தவத்தாற்சிவசிவா-நாடுங்கால்
வேண்டியவேண்டியாங்கெய்தலாற்செய்தவ
மீண்டுமுயலப்படும். (௨௭)

(கூடாவொழுக்கம்.)

அட்டுநரனானிட்டரக்கன்பழிக்கரசைத்
தெட்டிவழிகொண்டான்சிவசிவா-கிட்டினர்க்குப்
பற்றற்றேமென்பார்படிற்றொழுக்கமெற்றெற்றென்
றேதம்பலவுந்தரும். (௨௮)

(கள்ளாமை.)

இல்வலன்வாதாவிகபடதோயதுமலயச்
செல்வமுனிநோக்காற்சிவசிவா-சொல்லிற்
களவினாலாகியவாக்கமளவிறந்
தாவதுபோலக்கெடும். (௨௯)

(வாய்மை.)

பொங்குபுகழ்வாய்மைப்புனிதவதியார்க்கரனார்
செங்கனியையீந்தார்சிவசிவா-தங்க
மனத்தொடுவாய்மைமொழியிற்றவத்தொடு
தானஞ்செய்வாரிற்றலை. (௩௰)

(வெகுளாமை.)

தாவுசினத்தாற்றலையிழந்தான்றக்கனுமா
தேவிமகளாயுஞ்சிவசிவா-வாவன்மிகுந்
தன்னைத்தான்காக்கிற்சினங்காக்ககாவாக்காற்
றன்னையேகொல்லுஞ்சினம். (௩௧)

(இன்னாசெய்யாமை.)

புறம்பியத்துமின்னையுயிர்போக்கவந்தான்பட்ட
திறந்தெரியாதோசிவசிவா-பிறழ்ந்து
பிறர்கின்னாமுற்பகற்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றாமேவரும். (௩௨)

(கொல்லாமை.)

மேவும்வனசரனார்வேதியனைக்காத்தநலந்
தேவனறிவானேசிவசிவா-பூவுலகிற்
றன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறி
தின்னுயிர்நீக்கும்வினை. (௩௩)

(நிலையாமை)

எங்குமிறவானிறந்ததொருதூணீன்ற
சிங்கத்தாலன்றோசிவசிவா-தங்கிநிலை
நில்லாதவற்றைநிலையினவென்றுணரும்
புல்லறிவாண்மைகடை. (௩௪)

(துறவு.)

பத்ரகிரிமாதர்வசப்பட்டமனமீட்டதொரு
சித்ரகதையன்றேசிவசிவா-வொத்துத்
தலைப்பட்டார்தீரத்துறந்தார்மயங்கி
வலைப்பட்டார்மற்றையவர். (ருரு)

(மெய்யுணர்தல்.)

சொற்சுவைசேர்வாசகத்திற்சொன்னபொருளீதென்றே
சிற்சபையேபோனூர்-சிவசிவா-நற்கலைநூற்
கற்றீண்டுமெய்ப்பொருள்கண்டார்தலைப்படுவர்
மற்றீண்டுவாராநெறி. (ருசு)

(அவாவறுத்தல்.)

சாரங்கமீதுசடபரதன்சிந்தைவைத்துச்
சீரங்கம்பெற்றான்சிவசிவா-நேரு
மவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந்
தவாஅப்பிறப்பீனும்வித்து. (ருஎ)

(ஊழ்.)

உற்றாளைப்பெட்டகத்திட்டோட்டுமிலங்கேசனைப்பின்
செற்றாள்வந்தென்பார்சிவசிவா-வுற்றோரி
னூழிற்பெருவலியாவுளமற்றொன்று
சூழினுந்தான்முந்துறும். (ருஅ)

(பொருட்பால்-இறைமாட்சி.)

பெற்றவைக்கென்போவிரண்டுபேரிலொருவன்பிழைத்தாற்
சிற்றவைக்காமென்றான்சிவசிவா-வுற்ற
முறைசெய்துகாப்பாற்றுமன்னவன்மக்கட்
கிறையென்றுவைக்கப்படும். (ருகூ)

(கல்வி.)

பார்க்கவன்பாற்கல்விபயின்றகயன்பார்க்கவனோய்
தீர்க்கவாம்பெற்றான்சிவசிவா-வேற்கநன்றாக்
கற்கசடறக்கற்பவைகற்றபி
னிற்கவதற்குத்தக. (சுய)

(கல்லாமை.)

புத்தர்மிகவாதுபுகன்றதுபோய்வாதவூர்ச்
சித்தர்முனேதானூர்சிவசிவா-வொத்தநெறி
கல்லாதவருதனிநல்லர்கற்றார்முற்
சொல்லாதிருக்கப்பெறின். (சுக)

(கேள்வி.)

வெய்யமரப்பேருணாத்தவேடனும்வான்மீகியெனுந்
தெய்வமுனியாளுன்சிவசிவா-துய்ய
செவியுணர்விற்கேள்வியுடையாரவியுணவி
ளுன்றூரோடொப்பர்நிலத்து. (சஉ)

(அறிவுடைமை.)

சனகனுலகநெறிதாவாதஞான
தினகரனுனன்சிவசிவா-மனதினுட
னெவ்வதுறைவதுலகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு. (சங)

(குற்றங்கடிதல்.)

தன்மகனன்கன்றினுக்குந்தான்மந்திரிக்குமென்றுன்
சென்மமன்றேசென்மஞ்சிவசிவா-வுன்னுங்காற்
றன்குற்றநீக்கிப்பிறர்குற்றங்காண்கிற்பி
னென்குற்றமாகுமிறைக்கு. (சச)

(பெரியாரைத்துணைக்கோடல்.)

வன்றொண்டர்சேரனையும்வாவென்றரனைப்பச்
சென்றுதெரிவித்தார்சிவசிவா-வென்றுமென்றுந்
தம்மிற்பெரியார்தமராவொழுகுதல்
வன்மையுளெல்லாந்தலை. (சரு)

(சிற்றினஞ்சேராமை.)

அறியவசமோகலைக்கோட்டந்தணனுமாதர்
செறியவசத்தன்சிவசிவா-பிறிதெதன்
மனநலமன்னுயிர்க்காக்கமினநல
மெல்லாப்புகழுந்தரும். (சசா)

(தெரிந்துசெயல்வகை.)

பன்மறையோர்க்கானளித்தபாரரசன்கோம்பியெனுஞ்
சென்மமெடுத்தான்சிவசிவா-வுன்னின்மிகு
நன்றூற்றலுள்ளுந்தவறுண்டவரவர்
பண்பறிந்தாற்றுக்கடை. (சஎ)

(வலியறிதல்.)

நீசவுருவநிலனுடிரிசங்கு
தேசிகனுற்பெற்றுன்சிவசிவா-பேசின்
வினைவலியுந்தன்வலியுமாற்றுன்வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல். (சஅ)

(காலமறிதல்)

யோகிருந்தகாலமுணராதுறுமதனன்
றேகமிழந்தான்சிவசிவா-வாகி
லருவினையென்பவுளவோகருவியாற்
காலமறிந்துசெயின். (௪௯)

(இடனறிதல்)

வயத்திரதமேறிவருமபிமன்றன்னைச்
செயத்திரதன்கொன்றான்சிவசிவா-முயற்சியுட
னெண்ணியாரெண்ணமிழப்பரிடனறிந்து
துன்னியார்துன்னிச்செயின். (௫௰)

(தெரிந்துதெளிதல்.)

அத்தன்பதத்தியற்றுமாழிசலந்தரனைச்
சித்ரவதைசெய்தசிவசிவா-தத்தம்
பெருமைக்குமேனைச்சிறுமைக்குந்தத்தங்
கருமமேகட்டளைக்கல். (௫௧)

(தெரிந்துவினையாடல்.)

சதமுகனைராகவனுஞ்சானகியைக்கொண்டே
சிதையவதைத்தான்சிவசிவா-விதயத்
திதனையிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்
ததனையவன்கண்விடல். (௫௨)

(சுற்றந்தழால்.)

அன்றுதமருள்ளமறிந்தடைந்தவீடணற்குச்
சென்றுறுதிசொன்னான்சிவசிவா-வொன்று
முழைப்பிரிந்துகாரணத்தின்வந்தானைவேந்த
னிழைத்திருந்தெண்ணிக்கொளல். (௫௩)

(பொச்சாவாமை.)

இப்புவிமேற்கோயிலிறந்ததயனார்மறந்து
செப்புதலாலன்றோசிவசிவா-வெப்பொழுதும்
பொச்சாப்புக்கொல்லும்புகழையறிவினை
நிச்சநிரப்புக்கொன்றாங்கு. (௫௪)

(செங்கோன்மை.)

மங்காதமங்குறனைமாறன்விலங்கிட்டான்
செங்கோன்மகிமைசிவசிவா-வெங்கேனும்
வேலன்றுவென்றிதருவதுமன்னவன்
கோலதூஉங்கோடாதெனின். (௫௫)

(கொடுங்கோன்மை.)

தாதைசிறையிருக்கத்தங்கையழக்கஞ்சனுறுந்
தீதையெவர்சொல்வார்சிவசிவா-மேதினியி
லல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை. (௫௬)

(வெருவந்தசெய்யாமை.)

வண்ணமகனேவவருசேசகன்மடிந்தான்
திண்ணமிதுவன்றோசிவசிவா-வெண்ணின்
வெருவந்தசெய்தொழுகும்வெங்கோலனாயி
னொருவந்தமொல்லைக்கெடும். (௫௭)

(கண்ணோட்டம்.)

முப்புரத்தைநீறாக்கிமூவரையுங்காத்தநலஞ்
செப்பமுடியாதேசிவசிவா-வொப்பிற்
கருமஞ்சிதையாமற்கண்ணோடவல்லார்க்
குரிமையுடைத்திவ்வுலகு. (௫௮)

(ஒற்றாடல்.)

வந்தசுகசாரர்வடிவைநிருதனன்றிச்
சிந்தைசெய்தார்காண்பார்சிவசிவா-பந்தத்
துறந்தார்படிவத்தராகியிறந்தாராய்ந்
தென்செயினுஞ்சோர்விலதொற்று. (௫௯)

(ஊக்கமுடைமை.)

நல்லதினமென்றேநரகனிறுநாளுலகிற்
செல்லவரம்பெற்றான்சிவசிவா-வல்லமைசே
ருள்ளமிலாதவரெய்தாருலகத்து
வள்ளியமென்னுஞ்செருக்கு. (௬௰)

(மடியின்மை.)

தந்தையுளநோக்கித்தவமேவியதுருவன்
சிந்தைவலிதன்றோசிவசிவா-நந்து
மடியிலாமன்னவனெய்துமடியளந்
தான்றாயதெல்லாமொருங்கு. (௬௧)

(ஆள்வினையுடைமை.)

எய்தாதிராமற்கிலக்குவன்போலென்றுணாக்கச்
செய்தானடிமைசிவசிவா-நொய்தேனு
மின்பம்விழையான்வினைவிழைவான்றன்கேளிர்
துன்பந்துடைத்தூன்றுந்தூண். (௬௨)

(இடுக்கணழியாமை.)

இரணியன்றன்செய்தவிடும்பைதனைமைந்தன்
றிரணமாக்கண்டான்சிவசிவா-முரணி
யடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும். (௬௩)

(அமைச்சு.)

போயவரசாளிபுகவெழக்கண்டாளியுடல்
தீயினமைச்சிட்டான்சிவசிவா-வாயிற்
றெரிதலுந்தேர்ந்துசெயலுமொருதலையாச்
சொல்லலும்வல்லதமைச்சு. (௬௪)

(சொல்வன்மை.)

என்றும்பதினாறெனவரனோதியசொல்
சென்றதேயின்றுஞ்சிவசிவா-நன்றிபெறச்
சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து. (௬௫)

(வினைத்தூய்மை.)

மைந்தன்முடிவீழ்த்தான்மாள்கவெனக்கைவிரித்த
சிந்துபதிபட்டான்சிவசிவா-தந்தஞ்
சலத்தாற்பொருள்செய்தேமாற்றல்பசுமட்
கலத்துணீர்பெய்திரீஇயற்று. (௬௬)

(வினைத்திட்பம்.)

எய்துமுருவறிந்துமேந்திழையாள்பாவனைதான்
செய்தபடியாச்சேசிவசிவா-வையத்தி
னெண்ணியவெண்ணியாங்கெய்துபவெண்ணியார்
திண்ணியராகப்பெறின். (௬௭)

(வினைசெயல்வகை.)

மங்கை[illegible]கச்சவிழ்த்தமாயச்சயந்தனொரு
செங்கணிழந்தான்சிவசிவா-வெங்கு
முடிவுமிடையூறுமுற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல். (௬௮)

(தூது.)

சான்கியைக்கண்டரக்கன்றனிகலிவாலிலிடுந்
தீநகரிலிட்டான்சிவசிவா-வூனுக்
கிறுதிபயப்பினுமெஞ்சாதிறைவர்க்
குறுதிபயப்பதாந்தூது. (௬௯)

(மன்னரைச்சேர்ந்தொழுகல்.)
அன்றரசோடேரண்டனுடுமுனையாலவமே
சென்றுயிரையீந்தான்சிவசிவா-நன்றிபெற
வேட்பனசொல்லிவினையிலவெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ்சொல்லாவிடல். (எ௰)

(குறிப்பறிதல்.)
வென்றியிராமனெடுவில்லைமுனிவன்குறிப்பாற்
சென்றுவளைத்தான்சிவசிவா-மன்றிற்
குறிப்பிற்குறிப்புணர்வாரையுறுப்பினுள்
யாதுகொடுத்துங்கொளல். (எக)

(அவையறிதல்.)
மன்றிற்பரசமயகோளரிமுன்வல்லமணர்
சென்றறிலையென்னுஞ்சிவசிவா-துன்றுதற
வாற்றினிலைதளர்ந்தற்றேவியன்புல
மேற்றுணர்வார்முன்னரிழுக்கு. (எஉ)

(அவையஞ்சாமை.)
முத்தமிழ்ச்சங்கத்தவரைமூதுரையால்வள்ளுவருஞ்
சித்தமகிழ்வித்தார்சிவசிவா-வெத்தனையுங்
கற்றாரிற்கற்றாரெனப்படுவர்கற்றார்முற்
கற்றசெலச்சொல்லுவார். (எங)

(நாடு.)
பொன்னியெனவேழமுனிபொற்கரகநீர்கவிழ்த்த
சென்னிவளநாடேசிவசிவா-நன்னா
டிருபுனலும்வாய்ந்தமலையும்வருபுனலும்
வல்லரணுநாட்டிற்குறுப்பு. (எச)

(அரண்.)
காத்தானசலக்கருணாகரன்கலிங்கஞ்
சேர்த்தான்திறத்திற்சிவசிவா-பார்த்தா
லெனைமாட்சித்தாயினுமென்னாம்வினைமாட்சி
யில்லார்கணில்லாதரண். (எரு)

(பொருள்செயல்வகை.)
கொண்டான்வடகிரியிற்கூடலரசுபொருட்
செண்டாலடித்தேசிவசிவா-கண்டாயி
லொண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு
ளேனையிரண்டுமொருங்கு. (எசா)

(படைமாட்சி.)

பார்த்திவனைக்கட்டவிழ்த்துப்பத்திராயுவன்பகையைத்
தீர்த்தொருவனின்றான்சிவசிவா-பார்த்தங்
கொலித்தக்காலென்னாமுவரியெலிப்பகை
நாகமுயிர்ப்பக்கெடும். (௭௭)

(படைச்செருக்கு.)

உரமிறந்துபோர்காதவுள்ரத்திரவான்
சிரமறுந்தற்றான்சிவசிவா-தரமா
விழுப்புண்படாதநாளெல்லாம்வழுக்கினுள்
வைக்குந்தன்னாளையெடுத்து. (௭௮)

(நட்பு.)

உற்றகுசேலனலமுற்றிருத்தற்காவுவந்தோர்
சிற்றணவுட்கொண்டான்சிவசிவா-சுற்று
முடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே
யிடுக்கண்களைவதாநட்பு. (௭௯)

(நட்பாராய்தல்)

துருவதன்கட்டுண்டான்றுரோணனடியாரார்
செருவினின்முனஞ்சிவசிவா-வருவதன்மு
னாய்ந்தாய்ந்துகொள்ளாதான்கேண்மைகடைமுறை
தான்சாந்துயரந்தரும். (௮௰)

(பழமை.)

குறித்தரசுகன்னனுடன்கோதைவிளையாடத்
தெறித்தமணியுஞ்சிவசிவா-பொறுக்கி
னழிவந்தசெய்யினுமன்பறாரன்பின்
வழிவந்தகேண்மையவர். (௮௧)

(தீநட்பு.)

பொன்மானென்றாசைகொண்டபொன்னனையாள்பட்டதுயர்
சென்மாதரபாவஞ்சிவசிவா-சொன்னோங்
கனவினுமின்னாதுமன்னோவினைவேறு
சொல்வேறுபட்டார்தொடர்பு. (௮௨)

(கூடாநட்பு.

நாய்போல்வருமலகைதன்னட்பறிந்துமவள்
சேய்போலிருந்தான்சிவசிவா-மாயனெதிர்
நட்டார்போனல்லவைசொல்லினுமொட்டார்சொ
லொல்லையுணரப்படும். (௮௩)

(பேதைமை.)

தன்றலைமேற்றன்கைவைத்தோர்தானவன்முன்பெற்றவரஞ்
சென்றிறக்கலாச்சேசிவசிவா-வென்றென்றும்
பொய்படுமொன்றோபுனைபூணுங்கையறியாப்
பேதைவினைமேற்கொளின். (அ௪)

(புல்லறிவாண்மை.)

மாற்குமதவுங்கைடவனும்வாழ்நாளைத்
தீர்க்கவரமீந்தான்சிவசிவா-பார்க்கி
னறிவிலானெஞ்சுவந்தீதல்பிறிதியாது
மில்லைபெறுவான்றவம். (அ௫)

(இகல்.)

தாயடிமைவானமுதந்தத்தகற்றச்சார்வயினை
தேயனைமால்வென்றான்சிவசிவா-வேய
விகலெதிர்சாய்ந்தொழுகவல்லாரையாரே
மிகலூக்குந்தன்மையவர். (அ௬)

(பகைமாட்சி.)

ஐங்கரனென்றோராவரக்கன்றலைமோதிச்
செங்கரங்கொண்டான்சிவசிவா-தங்க
வழிநோக்கான்வாய்ப்பனசெய்யான்பழிநோக்கான்
பண்பிலன்பற்றார்க்கினிது. (அ௭)

(பகைத்திறந்தெரிதல்.)

ஐங்கரனைக்கண்டுநகைத்தருவணிநாலாந்திதியிற்
திங்கள்பகையானான்சிவசிவா-வெங்கும்
பகையென்னும்பண்பிலதனையொருவ
னகையேயும்வேண்டற்பாற்றன்று. (அ௮)

(உட்பகை.)

வென்றிபுனைசம்பரனைவென்றதவனில்விருந்து
தென்றலெனுந்தேரான்சிவசிவா-வென்று
மரம்பொருதபொன்போலத்தேயுமுரம்பொரு
துட்பகையுற்றகுடி. (அ௯)

(பெரியாரைப்பிழையாமை.)

வந்தமுனிவோராவணங்காவரமுனியைச்
சிந்தைசெயல்வேண்டுஞ்சிவசிவா-முந்தம்
பெரியாரைப்பேணுதொழுகிற்பெரியாரர்ந்
பேராவிடும்பைதரும். (௯௰)

பெண்வழிச்சேறல்-

ஓதுகனிபொருந்துமுங்கண்மனத்தினுற்ற
சேதிசொலினென்றான்சிவசிவா-வாதலினா
லில்லாள்கட்டாழ்ந்தவியல்பின்மையெஞ்ஞான்று
நல்லாருணாணுத்தரும். (௯௧)

(வரைவின்மகளிர்.)

போசனுரைக்கிசைந்தபுண்ணியனைவேசைகொன்று
டேசமறியாதோசிவசிவா-பேசுமிடத்
தன்பின்விழையார்பொருள்விழையுமாய்த்தொடியா
ரின்சொலிழுக்குத்தரும். (௯௨)

(கள்ளுண்ணாமை.)

சுக்கிரனார்சாபத்தொடர்பறிந்தோர்களிருந்த
திக்கினடப்பாரோசிவசிவா-மக்களென்பார்
கள்ளுண்ணப்போழ்திற்களித்தானைக்காணுங்கா
லுள்ளான்கொலுண்டதன்சோர்வு. (௯௩)

(சூது.)

வெற்றிநளன்சூதாடிவீடுவிட்டுக்காடுறைந்தான்
சிற்றிடையுந்தானுஞ்சிவசிவா-சுற்ற
முடைசெல்வமூணொளிகல்வியென்றைந்து
மடையாவாமாயங்கொளின். (௯௪)

(மருந்து.)

மாதவருண்மாமருதின்மங்கையர்க்குமுற்பிறப்பின்
சேதிதெரிவிக்குஞ்சிவசிவா-வாதலினான்
மாறுபாடில்லாதவுண்டிமறுத்துண்ணி
னூறுபாடில்லையுயிர்க்கு. (௯௫)

(குடிமை.)

தந்தைவதுவைதவிராதுவீடுமின்போய்ச்
சிந்தைதெளிவித்தான்சிவசிவா-நந்தா
நலம்வேண்டினாணுடைமைவேண்டுங்குலம்வேண்டின்
வேண்டுகயார்க்கும்பணிவு. (௯௬)

(மானம்.)

அன்றொருகைவேந்தனரிவைதனக்காவமர்க்குச்
சென்றுயிரையீந்தான்சிவசிவா-துன்று
மயிர்நீப்பின்வாழாக்கவரிமாவன்னா
ருயிர்நீப்பர்மானம்வரின். (௯௭)

(பெருமை.)

நல்லூழிநான்குமனுநாரியுடனண்ணவரி
செல்வமக்வாளுன்சிவசிவா-வொல்லும்
பெருமையுடையவராற்றுவாராற்றி
னருமையுடையசெயல். (௯௮)

(சான்றாண்மை.)

தாருவனமுனிவர்தம்பிழைநோக்காதருளே
சேரநடஞ்செய்தான்-சிவசிவா-வோருமவ
ரின்னாசெய்தார்க்குமினியவேசெய்யாக்கா
லென்னபயத்ததோசால்பு. (௯௯)

(பண்புடைமை.)

பாந்தட்பகைமுயலைப்பற்றுதலாலென்றுமதி
தேர்ந்துமதைநீக்கான்சிவசிவா-கூர்ந்த
வரம்போலுங்கூர்மையரேனுமரம்போல்வர்
மக்கட்பண்பில்லாதவர். (௱)

(நன்றியில்செல்வம்.)

நல்விசயன்கண்ணன்வரநன்மைபுரியாமறையோன்
செல்வமிருந்தென்னாஞ்சிவசிவா-தொல்லுலகி
னச்சப்படாதவன்செல்வநடுவூரு
ணச்சுமரம்பழுத்தற்று. (௱௧)

(நாணுடைமை.)

சாரும்பதியிலராய்த்தாருவனமாதர்தமைச்
சேரவிறைசென்றான்சிவசிவா-பாரின்மிசை.
நாணகத்தில்லாரியக்கமரப்பாவை
நாணாலுயிர்மருட்டியற்று. (௱௨)

(குடிசெயல்வகை.)

துய்யபகீரதனுந்தொல்லரசரல்லலறச்
செய்தவமென்சொல்வாஞ்சிவசிவா-வையமதி
னல்லாண்மையென்பதொருவற்குத்தான்பிறந்த
வில்லாண்மையாக்கிக்கொளல். (௱௩)

(உழவு.)

வள்ளிபுனங்காத்திருந்தவாறேதுவான்பயிர்செய்
தெள்ளிமையாலன்றோசிவசிவா-வுள்ளுமிடத்
தேரினுநன்றாலெருவிடுதல்கட்டபி
னீரினுநன்றதன்காப்பு. (௱௪)

(நல்குரவு)

மாமணியாற்கோசிகன்போய்மன்விடந்திரான்வறுமைத்
தீமையினான்மீண்டான்சிவசிவா-வாமு
னறன்சாராநல்குரவீன்றதாயானும்
பிறன்போலநோக்கப்படும். (௱௫)

(இரவு.)

தருமகுணமாவலிபாற்றானமெனச்சேர்ந்தான்
திருமகுணன்றான்சிவசிவா-பரிவி
னிரத்தலுமீதலேபோலுங்கரத்தல்
கனவிலுந்தேற்றாதார்மாட்டு. (௱௬)

(இரவச்சம்.)

ஒன்றுதவவேடமுடன்சராசந்தன்முனஞ்
சென்றிரந்தார்மன்னர்சிவசிவா-வென்றுங்
கரவாதுவந்தீயுங்கண்ணன்னார்கண்ணு
மிரவாமைகோடியுறும். (௱௭)

(கயமை.)

வாரிவழிதாராவருணனடைக்கலமாய்ச்
சேரவழிசெய்தான்சிவசிவா-வாருமிதஞ்
சொல்லப்பயன்படுவர்சான்றோர்கரும்புபோற்
கொல்லப்பயன்படுங்கீழ். (௱௮)

(காமத்துப்பால்-தகையணங்குறுத்தல்)

ஆர்ந்தசுரரானாரமுதணங்கைக்கண்டுமகிழ்
சேர்ந்தசுரரானார்சிவசிவா-சார்ந்துதனை
யுண்டார்கணல்லதடுநறாக்காமம்போற்
கண்டார்மகிழ்செய்தலின்று. (௱௯)

(குறிப்பறிதல்.)

பைந்தொடியுஞ்சுந்தரரும்பார்த்தகுறிப்பாலன்றோ
சிந்தையுமொன்றானார்சிவசிவா-தந்தமது
கண்ணொடுகண்ணிணைநோக்கொக்கின்வாய்ச்சொற்க
ளென்னபயனுமில. (௱௰)

(புணர்ச்சிமகிழ்தல்.)

பார்த்தன்சுபத்திரைதன்பார்வையினான்மெய்வெதுப்புந்
தீத்தனைக்கொண்டான்சிவசிவா-மாத்திரைநா
நீங்கிற்றெறூஉங்குறுகுங்காற்றண்ணென்னுந்
தீயாண்டுப்பெற்றாளிவள். (௱௰௧)

(நலம்புனைந்துரைத்தல்.)

நந்துசசிமுகத்தை நாண்மதியென்றேநகுடன்
சிந்தைமகிழ்கொண்டான்சிவசிவா-முந்து
மறுவாய்நிறைந்தவவிர்மதிக்குப்போல
மறுவுண்டோமாதர்முகத்து. (௱௰௨)

(காதற்சிறப்புரைத்தல்.)

காதற்குணம்விருத்தகாசிவிபசித்துரைத்த
சேதித்திறமேசிவசிவா-நீதிச்சொ
லுள்ளுவன்மன்யான்மறப்பின்மறப்பறியே
னொள்ளமர்க்கண்ணாள்குணம். (௱௰௩)

(நாணுத்துறவுரைத்தல்.)

சேரவிரைந்துவந்துஞ்சீதையிராமனுளந்
தேரவிருந்தாள்சிவசிவா-பாரிற்
கடலன்னகாமமுழந்துமடலேறாப்
பெண்ணிற்பெருந்தக்கதில் (௱௰௪)

(அலரறிவுறுத்தல்.)

இந்துநுதன்மாயைவிரசெண்ணிவிலாசிசொலச்
சிந்தைமகிழ்கொண்டாள்சிவசிவா-புந்தி
களித்தொறூஉங்கள்ளுண்டல்வேட்டற்றாற்காமம்
வெளிப்படுந்தோறுமினிது. (௱௰௫)

(பிரிவாற்றாமை.)

கோதைவரிவிற்றடக்கைக்கொண்டல்பிரிவாற்றாமற்
சீதைவனம்போனாள்சிவசிவா-வோதுமிடத்
தின்னாதினனில்லூர்வாழ்தலதனினு
மின்னாதினியார்ப்பிரிவு. (௱௰௬)

(படர்மெலிந்திரங்கல்.)

மாறவொருநாட்பிரிவின்மங்கையர்கணீடிரவைச்
சீறியுரைசெய்தார்சிவசிவா-கூறிக்
கொடியார்கொடுமையிற்றாங்கொடியவிந்நா
ணெடிய கழியுமிரா. (௱௰௭)

(கண்விதுப்பழிதல்.)

நாடரியகண்ணேநளனைவிழித்தகற்றித்
தேடியழலென்றேசிவசிவா-வோடிக்
கதுமெனத்தாநோக்கித்தாமேகலுழு
மிதுநகத்தக்கதுடைத்து. (௱௰௮).

(பசப்புறுபருவரல்.)

மாரன்மகன்மஞ்சமுடன்வாராமுன்வாணன்மகள்
சேருநினைவாலேசிவசிவா-சார்வாற்
பசந்தாளிவளென்பதல்லாலிவளைத்
துறந்தாரவரென்பாரில். (௱௰௯)

(தனிப்படர்மிகுதி.)

முல்லைமடவார்கண்ணுமுன்னின்றொருமொழியாற்
செல்லறவிரொன்றூர்சிவசிவா-சொல்லி
னசைஇயார்நல்காரெனினுமவர்மாட்
டிசையுமினியசெவிக்கு. (௱௨௰)

(நினைந்தவர்புலம்பல்.)

சந்தனுவுங்கங்கைதனைப்படத்திலேயெழுதிச்
சிந்தையலமந்தான்சிவசிவா-தந்தமனத்
துள்ளினுந்தீராப்பெருமகிழ்செய்தலாற்
கள்ளினுங்காமமினிது. (௱௨௧)

(கனவுநிலையுரைத்தல்.)

நித்திரையிலுற்றணைந்தானேயனிரத்நவல்லி
சித்திரரோகைக்குச்சிவசிவா-வொத்துரைக்கத்
துஞ்சுங்காற்றோண்மேலராகிவிழிக்குங்கா
னெஞ்சத்தாராவர்விரைந்து. (௱௨௨)

(பொழுதுகண்டிரங்கல்.)

வாடிக்கணவனுறுவல்விரவிற்பிங்கலையுந்
தேடிமனநொந்தாள்சிவசிவா-வோடிப்
பொருண்மாலையாளரனாயுள்ளிமருண்மாலை
மாயுமென்மாயாவுயிர். (௱௨௩)

(உறுப்புநலனழிதல்.)

வைதாள்விசயன்மருவாதுருப்பசியென்
செய்வாரையந்தாள்சிவசிவா-மெய்யாக்
கொடியார்கொடுமையுரைக்குந்தொடியொடு
தொல்கவின்வாடியதோள். (௱௨௪)

(நெஞ்சொடுகிளத்தல்.)

[illegible]ண்ணவருக்குமணிமாயன்மணம்புணர்த
திண்ணமெனவுற்றாள்சிவசிவா-வுண்ணினைவிற்
செற்றானைக்கைவிடலுண்டோநெஞ்சே[illegible]
மூற்றாலுற்றதவர். (௱௨௫)

(நிறையழிதல்.)

அன்றுவனத்தண்ணலருகேநிறையழிந்தார்
சென்றமுனிமாதர்சிவசிவா-வொன்ற
நிணந்தீயிலிட்டன்னநெஞ்சினார்க்குண்டோ
புணர்ந்தாடிநிற்பேமெனல். (௱௨௬)

(அவர்வயின்விதும்பல்.)

மன்னுமுன்கேளென்னவுஞ்சீமந்தனிதேருமனுளஞ்
சின்னமுறவென்னேசிவசிவா-வுன்னி
லொருநாளெழுநாள்போற்செல்லுஞ்சேட்சென்றார்
வருநாள்வைத்தேங்குபவர்க்கு. (௱௨௭)

(குறிப்பறிவுறுத்தல்.)

குன்றிற்சுமதிகுறிப்பாற்றருமகுத்தன்
சென்றமயல்கொண்டான்சிவசிவா-வென்று
முகைமொக்குளுள்ளதுநாற்றம்போற்பேதை
நகைமொக்குளுள்ளதொன்றுண்டு. (௱௨௮)

(புணர்ச்சிவிதும்பல்.)

மன்னனகலிகைநீவஞ்சனைநீங்காமலுடற்
சின்னமுறவென்னேசிவசிவா-வென்னவவற்
காணுங்காற்காணேன்றவறாயகாணாக்காற்
காணேன்றவறல்லவை. (௱௨௯)

(நெஞ்சொடுபுலத்தல்.)

கன்றால்விளவெறிந்தகண்ணனுடனெம்மைவிட்டுச்
சென்றாயேநெஞ்சேசிவசிவா-வொன்றாவித்
துன்பத்திற்கியாரோதுணையாவார்தாமுடைய
நெஞ்சந்துணையல்வழி. (௱௩௰)

(புலவி.)

சத்தியபாமைமலர்தந்திலனென்றாடவுடன்
சித்தமகிழ்வித்தான்சிவசிவா-நித்தமுணற்
குப்பமைந்தற்றாற்புலவியதுசிறிது
மிக்கற்றானீளவிடல். (௱௩௧)

(புலவிநுணுக்கம்.)

இப்பிறப்பிலேபிரியேனென்றநளனோடேல்
செப்பவரிதன்றேசிவசிவா-வப்படியே
யிம்மைப்பிறப்பிற்பிரியலமென்றேனாக்
கண்ணிறைநீர்கொண்டனள். (௱௩௨)

(ஊட்லுவகை.)

ழான்மகள்பாலூடிமாமானுன்மழகளிற்றின்
றேனனையாள்காந்தன்சிவசிவா-வேனெனிலங்
கூடுதல்காமத்திற்கின்பமதற்கின்பங்
கூடிமுயங்கப்பெறின். (௱௩௩)

சிவசிவவெண்பாமுற்றிற்று

முற்றும்.

ஆயிரத்தறுநூற்றொன்பதுபத்தாம்ஆண்டுசெல்சகாத்தநாளதனில்
மாயிருஞாலத்ததிகமாந்தில்லைமன்றில்வாழ்சென்னமல்லையர்
பாயிருடூரக்கும்பரிதிபோற்பாவப்படரகற்றிடுஞ்சிவவெண்பாத்
தீயவைபோக்கிப்பரகதிசேரச்செப்பினன்றெளிதவத்தவர்க்கே

இங்ஙன முன்தனிப்பிரசித்தத்திற் கண்டிருக்கப்பட்ட புத்தகம்.
ஷை திரிபுராந்தகமுதலியாரால் இப்போது பதிக்கின்றது.

தேவாரம்-அகத்திய த்திரட்டு-சேக்கிழார்புராணம்-தொண்டமண்டலசதகம் - ஏரெழுபது-மேழி எழுபது - திருக்கைவழக்கம் - திருக்கூவக்கலம்பகம்-திருக்கூவவுலா - திருக்கூ... புராணம் - ஆதிஅருணகிரிபுராணம்-சாதிநூல்-வண்ண...காவை.
...லா.

☞ சென்னபட்டணத்தைச்சார்ந்த ஓட்டேரிக்குசப்பேட்டையில்-தி-விசாகப்பெருமாளையரது கல்வி...ளக்கவச்சுக்கூடத்தில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.